ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/28 - 2016 නොවැම්බර් මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.11.10

*1992/28 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

*சுங்கக் கட்டளைச் (அத்தியாயம் 235) சட்டத்தின் 101 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதி*

**சுங்கப் பெறுமதி மதிப்பிடல் நோக்கத்திற்காக சரக்குகளின் போக்குவரத்துச் செலவினைத் தீர்மானித்தல்**

சுங்கக் கட்டளைச் (அத்தியாயம் 235) சட்டத்தின் 101 (1) எச் ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், பின்வரும் வகையிலான கப்பல்கள் மூலம் கொண்டுவரப்படும் சரக்குகளின் போக்குவரத்துச் செலவினை சுங்கப் பெறுமதி மதிப்பிடல் நோக்கத்திற்காக உகந்த முறையொன்றினை விதிப்பது அவசியமானதும் பொருத்தமானதும் என திருப்தியடைந்து 2016, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் இத்தால் நிர்ணயிக்கின்றேன் :-

(அ) இறக்குமதியாளர் ஒருவர் தனது சொந்தப் பொருட்களை தனக்குச் சொந்தமான கப்பல் மூலமாக இலங்கையில் எந்தவொரு துறைமுகத்திற்கும் கொண்டு வரும் போது அல்லது பட்டய சரக்குக் கப்பல் என்றவாறு வாடகைக்கு பெறப்பட்ட கப்பல் மூலம் இறக்குமதியாளர் ஒருவர் தனக்கு சொந்தமான தனி ஒரு பொருளை தொகையாக இலங்கையில் எந்தவொரு துறைமுகத்திற்கும் கொண்டு வரும் போது சுங்கக் கட்டளைச் (அத்தியாயம் 235) சட்டத்தின் இ அட்டவணையின் கீழான உறுப்புரை 8.1. (இ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுங்கப் பெறுமதி மதிப்பிடல் நோக்கத்திற்கான அத்தகைய சரக்குகளின் போக்குவரத்துச் செலவானது அப்பொருட்களினது எப். ஓ. பி. (FOB) பெறுமதியில் 15 % ஆக இருக்க வேண்டும்.

(ஆ) அவ்வாறிருப்பினும் சரக்குகளுக்கான பிரயோக செலவு சரக்குகளின் எப். ஓ. பி. (FOB) பெறுமதியில் 15 % க்கு குறைவாக இருப்பின், அவை சுங்கப் பெறுமதி மதிப்பிடல் நோக்கத்திற்காக கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

சுங்கக் கட்டளைச் (அத்தியாயம் 235) சட்டத்தின் உறுப்புரை 101 (1) எச் இன் கீழ் வெளியிடப்பட்ட 2012.05.04 ஆந் திகதிய 1756/29 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் 2016, நவெம்பர் 11 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் இத்தால் நீக்கப்படுகின்றது.

ரவி கருணாநாயக்க,<br>நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,<br>கொழும்பு 01,<br>2016, நவெம்பர் 10.

*12- 691*



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.